ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1873/16 - 2014 ජූලි මස 30 වැනි බදාදා - 2014.07.30

*1873/16 ஆம் இலக்கம் - 2014 ஆம் ஆண்டு யூலை மாதம் 30 ஆந் திகதி புதன்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I)- பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

*ச.வ.பீ. 21/78*

### 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டம்

1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 18 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 140 ஆம் பிரிவின் கீழ் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் ஆக்கப்பட்ட கட்டளைச் சட்டம்.

செயலாளர்,
பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு.

கொழும்பு,
*2014, யூலை 30.*

கட்டளைச் சட்டம்

1. இக்கட்டளைச்சட்டம் 2014 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, மருத்துவப் பட்டப்பின்படிப்பு நிறுவகத் (திருத்தக்) கட்டளைச் சட்டம் என எடுத்துக்காட்டப்படலாமென்பதுடன், வர்த்தமானியில் வெளியிடப்படுவதன் மேல் வலுக்கு வருதலும் வேண்டும்.

2. 2003 ஆம் ஆண்டு திசெம்பர் 3 ஆந் திகதிய 1317/17 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட கட்டளைச் சட்டத்தினால் கடைசியாகத் திருத்தப்பட்டவாறான 1980 ஆம் ஆண்டு ஏப்பிறல் 10 ஆந் திகதிய 83/7 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட 1980 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, மருத்துவப் பட்டப்பின்படிப்பு நிறுவகக் கட்டளைச் சட்டம் இத்தாற் பின்வருமாறு மேலும் திருத்தப்படுகின்றது:-

(1) 6 ஆம் பந்தியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன் மூலமும் :-

"6. நிறுவகத்தின் அலுவலர்கள் பின்வருவோராதல் வேண்டும் :-

(அ) பணிப்பாளர் ;
(ஆ) பிரதிப் பணிப்பாளர் ; அத்துடன்
(இ) எந்தப் பதவியை வகிப்பவர் இப்பந்தியின் நோக்கத்துக்காக அலுவலரொருவராகவுள்ளாரோ அந்தப் பதவியாகவுள்ளதெனக் கட்டளைச் சட்டத்தினால் வெளிப்படுத்தப்பட்ட வேறேதேனும் பதவியை வகிப்பவர்.".